# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



5 (i)

<u>நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ) அவர்களின் நடவடிக்கைகள்</u>

<u>807, அண்ணா சாலை, சென்னை-600 002.</u>

<u>முன்னிலை: திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப.,</u>

<u>www.tn.gov.in/tcp</u>

email id: <u>dtcp@vsnl.net</u>

<u>ந.க.எண்:23000/2017/பிஏ2</u> <u>நாள்:02.01.2018</u>

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - கட்டிடம் - மாமல்லபுரம் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டலம் கிராமம், சர்வே எண்:80/3A part-ல் அமையும் 3455.75m$^2$ பரப்பளவு மனையிடத்திற்கு மனை ஒப்புதல் - அம்மனையில் அமையும் G+3 floors+2 shops குடியிருப்பு கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க இசைவளித்தல் - சம்பந்தமாக.

பார்வை:
1. மனுதாரர், M/s.Arun Excello Constructions LLP, Chennai அவர்களின் விண்ணப்பம் நாள்:26.05.2017.
2. உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், ந.க.எண்:550/2017 மாஉதிகு, நாள்:24.11.2017.
3. அரசாணை (நிலை) எண்.86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.3.2012.
4. அரசாணை (நிலை) எண்.85, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:16.05.2017.
5. அரசாணை (நிலை) எண்.135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:21.07.2017.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:7486/2009/பிஏ2, நாள்:16.04.2009.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:21075/2009/பிஏ1 நாள்:04.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12201/2017 Spl-Cell, நாள்:28.09.2017.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் அவர்களின் கடிதம் ந.க.எண்:14227/2017 சிபி, நாள்:14.12.2017.

---

**<u>உத்தரவு:</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், தண்டலம் கிராமம், சர்வே எண்:80/3A Part - ல் அமையும் 3455.75m$^2$ பரப்பளவுள்ள மனையிடத்திற்கு ABCD என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் கீழ்கண்டவாறு குடியிருப்பு கட்டிடங்கள் அமைகிறது.

..2..

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorized Signatory

| BLOCK | GROUND FLOOR | | FLOOR AREA m² | NO OF FLOORS | TOTAL FLOOR AREA m² | TOTAL BUILT UP AREA m² | No of Dwelling Units | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | SHOPS m² | RESIDENCE m² | | | | | FLOOR | TOTAL |
| 1 | 67.35 | 1665.01 | 1731.03 | 3 | 5193.09 | 6925.45 | GROUND FLOOR | 43 |
| | | | | | | | Typical Floor (45X3) | 135 |
| | | | | | | | TOTAL | 178 |

மேற்கண்ட உத்தேச குடியிருப்புகள் கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி / திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ/ந.ஊ.இ.எண்:274/2017** என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>**சிறப்பு நிபந்தனைகள்**</u>:

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள வரிசை எண்.(1) முதல் (6) முடியவுள்ள 387.04 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
2. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை நிறுவனத்தின் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்பந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
5. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.



For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorized Signatory

6. "நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின்பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரயப் பத்திரம், குத்தகை பத்திரம் , பட்டா, தானப் பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரி பார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பத்தாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

7. மத்திய மற்றும் மாநில அரசு துறையினிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
8. The provisions in the G.O.(Ms) No.17, Housing and Urban Development (UD4(3) Department dated:5.2.2016 relating to installation and use of Solar Energy System should be followed.

<u>நிபந்தனைகள்</u>:

1) உத்தேச குடியிருப்புகள் உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.



For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorized Signatory

12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

13)உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்பட வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 6 மற்றும் 10-ல் காண் அரசாணை மற்றும் இவ்வலுவலக கடிதத்தின்படி, Shelter fund குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பார்வை 7 மற்றும் 8-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் 4 மற்றும் 5-ல் காணும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களை மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u>
மூன்று தொகுப்பு வரைபடங்கள்
3X 7=21.

ஒம்/- ஷம்பு கல்லோலிகர்
நகர் ஊரமைப்பு ஆணையர்(பொ)

பெறுநர்:
உறுப்பினர் செயலர்,
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

3/1/18
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

அ.மு.29.12.2017.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorized Signatory

(1, (ii))

தண்டலம் ஊராட்சி மன்ற தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை - திரு.சி.சு.தண்டபாணி

ந.க.எண். 151 /2018/ஆ1. நாள். 09.03.2018

பொருள் - குடியிருப்பு கட்டிடம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தண்டலம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.80/3Apt-ல் 3455.75 சதுர மீட்டர் மனைப்பரப்பில் அமையும் G+3Floors + 2Shops குடியிருப்பு கட்டிடத்திற்கு - திட்ட அனுமதி வழங்கி உத்திரவிடுதல்.

பார்வை - 1.அரசுஆணைஎண்.235 நாள்.19.08.97.
2.மனுதாரர் M/s. Arun Excello Construction LLP.,என்பவரின் ஆவணங்களுடன் கூடிய கடிதம்.
3.உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.550/2017/மாஉதிகு நாள் 05.03.2018.
4.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.23000/2017/பிஏ2, நாள்.02.01.2018.
5.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்( ம- III) அவர்களின் ஆய்வறிக்கை
6.தண்டலம் ஊராட்சி மன்றத்தீர்மான எண்.52 நாள்.09.03.2018. பலவகை ரசீது எண்.6964 நாள்.09.03.2018.

********

உத்தரவு -

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.80/3Apt-ல் 3455.75 சதுர மீட்டர் மனைப்பரப்பில் அமையும் G+3Floors + 2Shops குடியிருப்பு கட்டிடம் கட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு படி 05.03.2018முதல் 04.03.2023 வரை ஐந்தாண்டுகளுக்கு திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

Area Statement in Sq.m

மனையின் பரப்பு 3455.75 Sq.m

| S.No | Ground Floor | | Floor Area $m^2$ | No of Floors | Total Floor Area $m^2$ | Total Build up Area $m^2$ | No of Dwelling units | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Shops $m^2$ | Residence $m^2$ | | | | | Floor | Total |
| 1. | 67.35 | 1665.01 | 1731.03 | 3 | 5193.09 | 6925.45 | Ground Floor | 43 |
| | | | | | | | Typical Floor (45 x 3) | 135 |
| | | | | | | | Total | 178 |

இந்த அனுமதியானது உறுப்பினர் செயலர்(பொ), மாமல்லபுரம் உள்ளூர்திட்டக்குழுமம், மாமல்லபுரம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 550/2017/மாஉதிகு நாள் 05.03.2018-ன்படி 14.02.2018முதல் 13.02.2023 வரை ஐந்தாண்டுகளுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.1,49,092/- (Indian Overseas Bank, DD.No.259764 Dt.08.03.2018)வங்கி வரைவாக தண்டலம் ஊராட்சியில் செலுத்தப்பட்டு அதன் நகல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கட்டிட தொழிலாளர் நலநிதி, ரூ.3,01,852/- யூனியன் பாங்க் ஆ∴ப் இந்தியா வங்கியில் சம்மந்தப்பட்ட கணக்கு எண்ணில் RTGS மூலமாக செலுத்தப்பட்டுள்ளது.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorized Signatory

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் பின் பகுதியில் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 2 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு சட்டத்தின்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவால் அனுமதிக்கப்பட்ட காலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. அனுமதிக்கு வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்துகட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்டவேண்டும்.
7. கட்டிடம் கட்ட உத்தரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்தரவினை ரத்து செய்ய தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.
9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
10. கட்டிடத்திலிருந்து வரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்வாய்களும் கழிவு நீர்த்தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படாமலிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்தும், தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்தும் மற்றும் உறுப்பினர் செயலாளர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தனி அலுவலர்
தண்டலம் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

M/s. Arun Excello Construction LLP.
No.18, West Cott Road,
Bhatted Towers, Royapettah,
Chennai - 600014.

நகல் : ஊராட்சி செயலர், தண்டலம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

For ARUN EXCELLO CONSTRUCTIONS LLP

Authorized Signatory

**உறுப்பினர் செயலர் (பொ) மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், மாமல்லபுரம் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.வி.எம்.ராஜேந்திரன் பி.இ.,**

**ந.க.எண்.550 / 2017 மாஉ திகு** **நாள் : .03.2018**

**பொருள் :** **குடியிருப்பு கட்டிடம்** - மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - மாமல்லபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் , **தண்டலம்** கிராமம்- சர்வே எண். **80/3Apt** -ல் அமையும் **3455.75 $m^2$** பரப்பளவு மனையிடத்திற்கு மனை ஒப்புதல் - அம்மனையில் அமையும் G+3 Floors+2 Shops குடியிருப்பு கட்டிடத்திற்கு- திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**
1. மனுதாரர் **M/s. Arun Excello Consturction LLP** அவர்களின் கடிதம் நாள். 06.06.2017
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.550/2017 மா.உ.தி.கு நாள்.24.11.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண். 23000/2017/பிஏ2 நாள்.02.01.2018.
4. 155-வது மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்டம் தீர்மானம் எண். 04 நாள் 16.02.2018
5. அரசாணை (நிலை) எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை,நாள்.28.03.2012.
6. அரசாணை எண்.85, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை,நாள்.16.05.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009 பிஏ2, நாள் 16.04.2009
8. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/2009 பிஏ1, நாள் 04.04.2012.
9. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12201/2017 Spl cell,,நாள்.28.09.2017.
10. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள். 07.02.2018 அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சிக் கட்டணம், மற்றும் நன்னிலைவரி, கட்டணங்கள் செலுத்தக் கோரியது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை நிறைவு செய்ய கோரியது.
11. மனுதாரர் **M/s. Arun Excello Consturction LLP**., அவர்களின் கடிதம் நாள்.23.02.2018 அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு கட்டணம், வளர்ச்சிக் கட்டணம் மற்றும் நன்னிலைவரி செலுத்ியது .

*****

**உத்திரவு**

பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் நடவடிக்கைகளின் கடிதத்தில் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் , **தண்டலம்** கிராமம்- சர்வே எண். **80/3Apt** -ல் அமையும் **3455.75 m²** பரப்பளவு மனையிடத்திற்கு மனை ஒப்புதல் - அம்மனையில் அமையும் G+3 Floors+2 Shops குடியிருப்பு கட்டிடத்திற்கு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ/ந.ஊ.இ எண். 274 /2017** என எண்ணிடப்பட்டு பெறப்பட்டுள்ளது.

உத்தேசம் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

**Area Statement in Sq.m**

**மனையின் பரப்பு - 3455.75 Sq.m**

| S.No | Ground Floor | | Floor Area m² | No of Floors | Total Floor Area m² | Total Build up Area m² | No of Dwellings units | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Shops m² | Residence m² | | | | | Floor | Total |
| 1. | 67.35 | 1665.01 | 1731.03 | 3 | 5193.09 | 6925.45 | Ground Floor | 43 |
| | | | | | | | Typical Floor (45 x 3) | 135 |
| | | | | | | | Total | 178 |

பார்வை 4-ல் கண்ட மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் 155-வது கூட்ட தீர்மானம் எண்.04-ல், திட்ட அனுமதி வழங்க தீர்மானம் பெறப்பட்டுள்ளது. பார்வை 8 மற்றும் 9-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் பார்வை 5, மற்றும் 6-ல் காணும் அரசாணைகளின்படி பார்வை 10-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் மனுதாரரிடம் அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம், அபிவிருத்தி கட்டணம் மற்றும் நன்னிலை வரி கட்டணம் ஆகிய கட்டணங்கள் கோரப்பட்டு பார்வை 11-ல் கண்ட மனுதாரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்படவேண்டிய அனைத்து கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது அதற்கான விவரம் பின்வருமாறு :

1. அடிப்படை வசதி மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம் **ரூ.25,98,000/-** நாள் **22.02.2018** SBI,வங்கி Thirukalukundram கிளையில் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
2. நன்னிலை வரி **ரூ.19,000/-**ஐ SBI, வங்கி Thirukalukundram கிளையில், நாள்.**22.02.2018**-ல் செலுத்தியதற்கான கருவூலக செலுத்து சீட்டு பெறப்பட்டுள்ளது.
3. அபிவிருத்தி கட்டணம் **ரூ.1,06,000/-** IOB Bank, சென்னை கிளையில் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,தலைப்பில் வங்கி கேட்பு வரைவோலை எண்.259675 நாள். **20 .02.2018**-ல் செலுத்தப்பட்டு அதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட **தொகுப்பு குடியிருப்பு** கட்டிடத்திற்கு **க.வ./ந.ஊ.இ.எண். 274 /2017** என எண்ணிடப்பட்டு கட்டிட அனுமதியும் வழங்கப்பட்டுள்ள **தொகுப்பு குடியிருப்பு** கட்டிட வரைபடங்களுக்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49(i) (ii) (iii)-ன் கீழ் **க.வ./மா.உ.தி.கு எண். 12/2018** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த திட்ட அனுமதி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 50-ன் படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து **05.03.2018** முதல் **04.03.2023** **வரை ஐந்தாண்டுகளுக்கு** மட்டுமே செல்லத்தக்கதாகும்

மேற்படி திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தேச கட்டிடத்திற்கு தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997 (அரசாணை எண் 255. ஊரக வளர்ச்சித் துறை சி2, நாள்.18.08.1997)-ன்படி உரிய உத்தரவு வழங்கப்படல் வேண்டும் என உள்ளாட்சிக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

1. பொது ஒதுக்கீடு திறவிடங்கள் நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்க வேண்டும்.
2. பொது ஒதுக்கீடு திறவிடத்தினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு அதன் விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சமந்தப்பட்ட அலுவலகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequancy of the foundations.
4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant / developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

5. "நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

6. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

7. The provisions in the G.O.(Ms). No.17; Housing and Urban Development [UD4-(3)] Department dated; 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

**நிபந்தனைகள்**

1. உத்தேச குடியிருப்புகள் உபயோகக் கட்டுமானங்களுக்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 03.11.2004-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்கவேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.
13. Applicant should obtain consent from Tamil Nadu Pollution Control Board Under Section 25 of the water Act 1974 for discharge of sewage.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்கவேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு **தண்டலம் ஊராட்சி/ கிராமம்** தனி அலுவலர்/ ஆணையாளர்,அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு **தண்டலம் ஊராட்சி/ கிராமம்,** தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8-3-18

உறுப்பினர் செயலர் (பொ)
மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாமல்லபுரம்

8/3/18

**இணைப்பு :**
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

**பெறுநர்**
தனி அலுவலர்/ ஆணையாளர்,
**தண்டலம் ஊராட்சி/ கிராமம் ,**
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**நகல்**
**M/s. Arun Excello Consturction LLP.**
No.18, West Cott Road,
Bhattad Towers, Royapattah,
Chennai-600 014.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate